| D–5096 |
|---|

| Sub. Code |
|---|
| 10711 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

First Semester

இக்கால இலக்கியம்

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்க.

1. பாரதியாரின் முதல் கவிதை நூல் எப்பெயரில் எவ் ஆண்டு வெளிவந்தது?

2. பெண் கல்வியின் அவசியம் குறித்துப் பாரதிதாசன் எழுதிய நூல்கள் எவை?

3. மாங்கனி குறுங்காவியத்தைக் கண்ணதாசன் எங்கே எழுதினார்?

4. புதுக்கவிதை படைப்பில் தடம்பதித்த இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.

5. கவிஞர் மீராவின் படைப்புகளுள் இரண்டினை எழுதுக.

6. ஹைக்கூ வடிவம் யாது?

7. 'இன்னொரு காந்திக்காக' நாடகத்தின் ஆசிரியர் யார்?

8. 'தென்னாட்டு மாப்ஸான்' எனப் புகழப்படும் சிறுகதை ஆசிரியர் யார்?

9. ‘அளம்’ கதையின் கதைக்கரு யாது?

10. எஸ் இராமகிருஷ்ணனின் எந்நூலுக்குச் சாகித்திய அகாடமி விருது வழங்கப்பட்டது?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) குயிலின் முற்பிறப்புக் கதையை எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழின் இனிமைகளாகப் பாவேந்தர் குறிப்பிடுவனவற்றை விளக்குக.

12. (அ) அடலேறுவின் குணநலன்களை எழுதுக .

(அல்லது)

(ஆ) இளம்பிறையின் நாட்டுப்புறப் பாடல் வெளிப்படுத்தும் சமூக அவலத்தை எழுதுக.

13. (அ) முதுமையின் நினைவுகளாகப் பிருந்தாசாரதி கூறுவனவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) கவிஞர் அமுதபாரதியின் ஹைக்கூ கவிதைகளை விளக்குக.

14. (அ) அய்க்கண் நாடகம் வெளிப்படுத்தும் காந்திய சிந்தனைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) ‘களம்’ வழி அறியலாகும் பெண்களின் மன உணர்வுகளை விளக்குக.

15. (அ) 'திருஷ்டிப் பரிகாரம்' கதை உணர்த்தும் செய்தியை விளக்குக.

(அல்லது)

(ஆ) எஸ் இராமகிருஷ்ணனின் 'காந்தியோடு பேசுவேன்' சிறுகதையில் பயன்படுத்தப்பட்டுள்ள வினாவிடை உத்தியைச் சான்றுடன் விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. குயில் பாட்டின் வழி அறியலாகும் வேதாந்தக் கருத்துக்களை விவரிக்க.

17. மாங்கனி காப்பியச் சிறப்பினைக் கட்டுரைக்க.

18. மு. மேத்தாவின் புதுக்கவிதைகள் வழி வெளிப்படும் சமூகப்பற்றை விவரிக்க.

19. கம்பராமாயணத்தில் பெண்களின் செல்வாக்குக் குறித்து மு.வ. கூறுவனவற்றைக் கட்டுரைக்க.

20. 'ஒரு வீட்டின் மூலையில் சமயலறை' கதை மூலம் அம்பை உணர்த்தும் செய்திகளை விவரிக்க.

| D–5097 |
|---|

| Sub. Code |
|---|
| 10712 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

First Semester

இலக்கணம் – நன்னூல் – எழுத்து

(CBCS – 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. பாயிரத்தின் பெயர்களைக் கூறுக.

2. நூலின் வகைகளை எழுதுக.

3. தந்திரவுத்தி என்பது யாது?

4. உரையினது பொதுவிலக்கணத்தைக் கூறுக.

5. தலை மாணாக்கர் என்பவர் யார்?

6. எழுத்தின் வகைகளை எழுதுக.

7. இனவெழுத்து என்பது யாது?

8. பதம் என்றால் என்ன?

9. இடைநிலை வகைகளைக் கூறுக.

10. புணர்ச்சி என்பது யாது?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) பாயிரத்தின் வகைகளைச் சான்றுகாட்டி விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) எழுவகை மதங்களைச் சான்றுடன் விளக்குக.

12. (அ) நல்லாசிரியரின் இலக்கணம் குறித்து நன்னூலார் வழிநின்று தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) மாணாக்கர் வரலாறு குறித்துச் செய்திகளை வகைப்படுத்தியுரைக்க.

13. (அ) எழுத்துகளின் வகைகளைச் சான்றுடன் விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) பகுபதத்தின் வகைகளை எழுதி சான்றுடன் தெளிவுபடுத்துக.

14. (அ) ஐம்பால் விகுதிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பொதுப் புணர்ச்சி தன்மை குறித்து விளக்கியுரைக்க.

15. (அ) ஐகார வீற்றுச் சிறப்புவிதி குறித்து விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) லகர, ளகர வீறு குறித்துத் தெளிவுபடுத்துக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு <u>கட்டுரை வடிவில்</u> விடை தருக.

16. முப்பத்திரண்டு உத்திகளின் சிறப்பினை விவாதிக்க.

17. எழுத்துகளின் பிறப்பினைப் பவணந்தியார் வழிநின்று விரிவாக எடுத்துரைக்க.

18. சார்பெழுத்துகளின் வகைகளைக் கூறி விவாதிக்க.

19. உருபு புணர்ச்சியினைக் கட்டுரை வடிவில் எழுதுக.

20. நமது கல்லூரியில் நடைபெறும் மகளிர் தின விழாவிற்கு வரவேற்பிதழ் ஒன்றினை எழுதுக.

———————

| D–5098 |
|---|

| Sub. Code |
|---|
| 10713 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

First Semester

தமிழக வரலாறு

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. குமரிகோடு கடல் கொண்ட வரலாற்றைக் கூறும் நூல் யாது?
2. ஆதிச்சநல்லூர் - சிறுகுறிப்பு வரைக.
3. களப்பிரர் காலத்தில் செல்வாக்குப் பெற்ற சமயங்கள் எவை?
4. நந்திகலம்பகம் எம்மன்னனின் மீது பாடப்பெற்றுள்ளது?
5. ‘சுங்கம் தவிர்த்த சோழன்’ யார்?
6. மூவருலா பாடியவர்?
7. சோழர் காலத்தில் நிலவிய தேர்தல்முறையை எங்ஙனம் குறிப்பர்?
8. மங்கம்மாள் சாலையை அமைத்த ஆட்சியாளர்?
9. பெரியார் ஈ.வே.ரா. தோற்றுவித்த கட்சி?
10. ‘திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்’ என்னும் நூலின் ஆசிரியர்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பழந்தமிழகத்தில் கிடைக்கப்பெற்ற நாணயங்களை வகைப்படுத்தி விளக்குக.

(அல்லது)

(ஆ) முச்சங்கங்கள் குறித்த வரலாற்றுச் செய்திகளை எழுதுக.

12. (அ) களப்பிரர் காலத் தமிழகத்தின் ஆட்சிமுறையை விவரிக்க.

(அல்லது)

(ஆ) 'நரசிம்மவர்மன்' வாதாபிக்கொண்டான் எனச் சிறப்பிக்கப்பெறுவதை விவரிக்க.

13. (அ) பிற்காலச் சோழர்களின் ஆட்சி முறைகளைச் சுருக்கி வரைக.

(அல்லது)

(ஆ) சோழர்காலக் கட்டடக்கலையின் தனித்துவங்களை எடுத்துரைக்க.

14. (அ) நாயக்கர்களின் பாளையப்பட்டு ஆட்சிமுறை விவரிக்க.

(அல்லது)

(ஆ) இந்திய விடுதலைப் போராட்டத்தில் 'வேலூர் புரட்சி' பெறுமிடத்தை நிறுவுக.

15. (அ) விடுதலைப்போரில் கலந்து கொண்ட தமிழகப் பெண்கள் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) ஆங்கிலயர்களின் தமிழ் அச்சுப்பணியைப் பற்றி எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சங்க காலப் பெண்களின் வாழ்வியலில் கல்வி - கட்டுரை வரைக.

17. களப்பிரர் காலம் இருண்ட காலம் எனக் குறிப்பிடப்படுவதற்கான காரணத்தை ஆராய்க.

18. சோழர்களின் ஊராட்சிமுறையில் தனித்துவத்தை ஆராய்க.

19. ஆங்கில வரவால் தமிழகம் பெற்ற நன்மைகளைத் தொகுத்துரைக்க.

20. சுயமரியாதை இயக்கத்தால் தமிழகத்தில் விளைந்த பயன்களைத் தொகுத்துரைக்க.

———————

| D–5099 |
|---|

| Sub. Code |
|---|
| 10714 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

First Semester

சிற்றிலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்க.

1. கல்லாடம் குறித்த பழமொழிகள் யாவை?
2. கூடல் மாநகரின் உயிரொத்தவன் யார்?
3. கலம்பக உறுப்புகள் மொத்தம் எத்தனை?
4. "மதங்கு" என்றால் என்ன?
5. பெரியாழ்வார் பாடிய நூல்கள் எவை?
6. பிள்ளைத்தமிழ் பற்றிய இலக்கணக் குறிப்பை முதலில் வழங்கும் நூல் எது?
7. கண்ணன் தன் கையில் ஏந்துபவை எவை?
8. பரணி என்றால் என்ன?
9. ஒட்டக்கூத்தர் பாடிய நூல்களுள் இரண்டினை எழுதுக.
10. மீன்கொடியைக் கொண்ட இருவர் யாவர்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) "அமுதமும் தருவும்" என்ற பாடலில் கல்லாடர் முருகனை எவ்வாறு போற்றுகின்றார்?

(அல்லது)

(ஆ) அறிவற்ற அமைச்சன் செயல்களாகக் கல்லாடர் கூறுவன யாவை?

12. (அ) நந்தி வர்மனின் வீரம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) "மறம்" என்னும் உறுப்பிலமைந்த நந்திக்கலம்பகப் பாடலை விளக்குக.

13. (அ) பல்லாண்டு பாடப் பெரியாழ்வார் பிறரை அழைத்த பான்மையை எழுதுக.

(அல்லது)

(ஆ) கண்ணன் செய்த அருளாடல்களை விளக்குக.

14. (அ) கண்ணனுக்குத் தேவர்கள் அளித்த பரிசுகளைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) முதுபேய் காட்டிய இந்திர சாலத்தை எழுதுக.

15. (அ) தெரிவை பந்தாடிய தன்மையை எழுதுக.

(அல்லது)

(ஆ) சேய் முருகனை மீனாட்சியம்மை சீராட்டிய திறத்தை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. தமர் நினைவு உரைத்துத் தோழி வரைவு கடாதலைக் கல்லாடம் வழி விவரிக்க.

17. நந்திக் கலம்பகத்தில் தோழி கூற்றில் அமைந்த பாடல்களை விவரிக்க.

18. கண்ணன் பிறந்ததால் ஆயர் அடைந்த மகிழ்ச்சியைக் கட்டுரைக்க.

19. கலிங்கத்துப்பரணி வழி வெளிப்படும் செயங்கொண்டாரின் கவித்திறத்தை விவரிக்க.

20. அம்மானைப் பருவத்தின் வழி அறியலாகும் மீனாட்சியம்மையின் அருளாற்றலைக் தொகுத்துரைக்க.

———————

**D–5100**

**Sub. Code**
**10721**

DISTANCE EDUCATION

B.Litt. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

இரண்டாம் பருவம்

அற இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours　　　　Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. திருக்குறளுக்கு உரை எழுதியவர்களில் காலத்தால் முந்தியவர் யார்?

2. குடிமை அதிகாரத்தில் இடம்பெறும் இயல்கள் யாவை?

3. நிலையின் இழிந்தவர்க்கு வள்ளுவர் காட்டும் உவமை எது?

4. பண்புடைமை என்னும் வழக்காகத் திருவள்ளுவர் குறிப்பன யாவை?

5. தனது தகுதிக்குக் குறைந்தவரிடம் அடைந்த தோல்வி ஏற்பது எத்தன்மையது?

6. வேளாண் மரபுக்கு வேதம் எனக் குறிக்கப்படும் நூல் எது?

7. பழமொழி நூலைப் பழைய உரையுடன் வெளியிட்டவர் யார்?

8. கழுமலத்தில் கட்டப்பட்ட யானை எந்த அரசனிடம் சென்றது?

9. குமரகுருபரர் யாரிடம் சீடராக இருந்து உபதேசம் பெற்றார்?

10. உடம்பாகிய வீட்டுக்கு விலா எலும்புகள் எத்தனை உள்ளது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) துன்பநெறி குறித்த வள்ளுவரின் சிந்தனைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பண்புடைமை குறித்து வள்ளுவர் குறிப்பனவற்றை விவரிக்க.

12. (அ) பெருமைக்கும் சிறுமைக்கும் உள்ள தொடர்பைத் திருவள்ளுவர் வழிப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) திருக்குறளின் அமைப்பு முறை குறித்து விளக்குக.

13. (அ) நாலடியாரின் சிறப்புகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) அறிவுடைமை குறித்து முன்றுரையரையனார் கூறுவன யாவை?

14. (அ) இளமை நிலையாமை குறித்துத் திருமூலர் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) திருமூலர் உடலின் தன்மையை எவ்வாறு விளக்குகின்றார்?

15. (அ) குமரகுருபரரின் இலக்கியப் பணிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) நீதி நெறி விளக்கம் உணர்த்தும் கல்வியின் சிறப்புகளை விவரிக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. திருக்குறளின் தனித்தன்மைகளை ஆராய்க.

17. குடிமை, மானமுடைமை குறித்த வள்ளுவரின் கருதுக்களைத் தொகுத்துரைக்க.

18. நாலடியார் அறிவுறுத்தும் அறிவுடைமை குறித்து விவரித்தெழுதுக.

19. திருமந்திரத்தின் நிலையாமைக் கோட்பாடுகளுக்குச் சான்று தந்து விளக்குக.

20. குமரகுருபரரின் வாழ்க்கை வரலாற்றை விரித்துரைக்க.

| D–5101 |
|---|

| Sub. Code |
|---|
| 10722 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Second Semester

இலக்கணம் — நன்னூல் சொல்

(CBCS 2018 – 2019 Academic year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. மூவகை மொழிகள் யாவை?

2. உயர்திணை எனப்படுவோர் யாவர்?

3. இயற்சொல் என்றால் என்ன?

4. பிறிதின் கிழமைப் பொருள்கள் யாவை?

5. தெரிநிலை வினை எவற்றைக் கொண்டு அறியப்படும்?

6. தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை ஒழிய நிற்பது எது?

7. உம்மைத்தொகை நிற்கும் இடங்கள் எவை?

8. நன்னூல் சுட்டும் பொருள்கோள் வகைகள் எத்தனை?

9. உலகப் பொருள்களின் குணம் எவ்விரு பண்புகளில் அடங்கும்?

10. வண்ணங்கள் யாவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) படர்க்கைச் சொற்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) செய்யுள் என்பதற்கு நன்னூலார் தரும் விளக்கம் யாது? விளக்குக.

12. (அ) இரண்டாம் வேற்றுமை உருபும் பொருளும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வினையெச்சங்கள் குறித்து விவரிக்க.

13. (அ) தன்மைப் பன்மை வினைமுற்றுகளைச் சான்றுகளுடன் எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சினை வினைகள் குறித்த நன்னூலார் கருத்தினை விளக்கியுரைக்க.

14. (அ) பெயர் வினைகள் செய்யுளில் திரிந்து வருமாற்றை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அன்மொழித் தொகைகளை விளக்குக.

15. (அ) ஒரு குணம் தழுவிய பொதுச் சொல் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) உயிருள்ள பொருள்களின் பண்புகளை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. பெயர்ச்சொல்லின் பொது இலக்கணம் கூறி, சொற்களின் வகைகளை எடுத்துரைக்க.

17. மூன்றாம் வேற்றுமை உருபின் பொருளும் வகையும் குறித்து விரித்துரைக்க.

18. எச்ச வகைளை நன்னூலார் வழி நின்று விளக்குக.

19. இடைச்சொற்களின் பொருண்மைகள் குறித்துக் கட்டுரை வரைக.

20. நிறுத்தக் குறிகளின் பண்பும் பயனும் குறித்து விரித்துரைக்க.

———————

**D–5102**

**Sub. Code**
**10723**

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Second Semester

தமிழ் மொழி வரலாறு

(CBCS – 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. தென்திராவிட மொழிகள் இரண்டினை எழுதுக.
2. தமிழில் உருவாக்கப்பட்ட முதல் அகராதி யாது?
3. மிடற்றுப் பிறந்த வளி – இதில் 'வளி' என்பதன் பொருள் கூறுக.
4. கல் + தீது – எவ்வாறு புணரும்?
5. கலைச்சொல் என்றால் என்ன?
6. மொழிபெயர்ப்பின் உயிர்த்துடிப்பு என எதனைக் கருதுகின்றனர்?
7. 'நாஞ்சி வட்டார வழக்கு' எம்மாவட்டத்தின் பேச்சு வழக்கு?
8. நன்னூல் ஆசிரியர் பெயரைத் தருக.
9. 'தமிழி' – சிறு குறிப்பு வரைக.
10. 39 தமிழ் எழுத்து வடிவங்களைக் கற்றால் போதும் என்று கூறியவர்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) திராவிட மொழிகளைப் பகுத்துப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியரின் ‘வேற்றுமை உருபுகள்’ பற்றிய கருத்துகளை எழுதுக.

12. (அ) கல்வெட்டுக்கள் எழுதப்படும் முறைகளை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) பல்லவர் காலத்தில் அகரம் இகரமாதலைச் சான்றுடன் விளக்குக.

13. (அ) சதுரகராதியின் சிறப்புகளைச் சான்றுகளுடன் விவரிக்க.

(அல்லது)

(ஆ) மராட்டியச் செப்பேடுகளில் காணப்படும் சொற்கள் குறித்துச் சுட்டியுரைக்க.

14. (அ) கலைச்சொல்லாக்கத்தில் ஒலிபெயர்ப்பின் தேவையை உணர்த்துக.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பாளருக்கு இருக்க வேண்டிய பண்புகளை விளக்குக.

15. (அ) வானொலியில் தமிழ் மொழியின் போக்குகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) இணையப் பயன்பாட்டில் தமிழ்மொழியின் வளர்ச்சியை நிறுவுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. மொழியின் தோற்றத்தை உரையாசிரியர் வழிநின்று விளக்குக.

17. தமிழில் தோன்றிய இலக்கண நூல்கள் குறித்துக் கட்டுரைக்க.

18. அறிவியல் மொழிபெயர்ப்பின் சிறப்புக் கூறுகளைச் சான்றுகளுடன் விவரிக்க.

19. மதுரை வட்டார வழக்கின் இயல்புகளை விளக்கி வரைக.

20. எழுத்துச் சீர்த்திருத்தம் செய்த சான்றோர்கள் குறித்து விரித்துரைக்க.

| D–5103 |
|---|

| Sub. Code |
|---|
| 10724 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Second Semester

திராவிட மொழிகளின் ஒப்பாய்வியல்

(CBCS 2018-19 Academic Year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. வில்லியம் ஜோன்ஸ் உருவாக்கிய சங்கம் எது?

2. திராவிட மொழிகளின் முப்பிரிவுகள் யாவை?

3. தெலுங்கு மொழியை ஐரோப்பியர்கள் எப்பெயரில் அழைப்பர்?

4. தமிழில் உடம்படு மெய்யாக வரும் எழுத்துக்கள் யாவை?

5. தெலுங்கு மொழியில் உயர்திணை அஃறிணைப் பெயர்கள் எவ்வாறு குறிக்கப்படுகின்றன?

6. இந்தோ ஐரோப்பிய மொழிகளில் காணப்படும் எண் பாகுபாடுகள் எவை?

7. நான்கு என்பதன் மூலத்திராவிட வடிவம் யாது?

8. தெலுங்கு மொழியில் சு. பு, இஞ்சி என்பன எவ்வினை உருபுகளாக இடம்பெறுகின்றன?

9. தொழிற் பெயர்கள் எவ்வாறு கூறுபடுத்தப்படுகின்றன?

10. வினையடை என்றால் என்ன?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) வடதிராவிட மொழிகளின் சிறப்பியல்புகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) மூலத்திராவிட மொழிக்கும் திராவிட மொழிக்கும் உள்ள தொடர்புகளை விளக்குக.

12. (அ) மெய்யொலிகள் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) திராவிட மொழிகளில் முன்னண்ண ஆடொலிகள் அமையுமாற்றை விளக்குக.

13. (அ) ஒலிப்புடை வல்லொலி மாற்றங்களுக்குப் பர்ரோ தரும் விளக்கங்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) உயர்திணை ஆண்பால் ஒருமை விகுதிகள் குறித்து எழுதுக.

14. (அ) திராவிட மொழிகளில் சுட்டு வினாப்பெயர்களின் தன்மைகள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) இறந்தகாலம் அல்லாதன குறித்த கருத்துக்களைச் சுருக்கித் தருக.

15. (அ) பெயரெச்சங்கள் திராவிட மொழிகளில் அமையுமாற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) திராவிட மொழிகளின் சொற்றொடர் ஒழுங்கு குறித்து விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. திராவிட மொழிகளின் தனித்தன்மைகளை ஆராய்ந்துரைக்க.

17. ஒலி பிறப்பும் ஒலி மாற்றங்களும் என்னும் தலைப்பில் கட்டுரை தருக.

18. திராவிட மொழிகளில் மூவிடப் பெயர்கள் அமையுமாற்றை விரித்துரைக்க.

19. ஒலிமாற்றத்தில் உருபன்களும் சொல்லாக்கமும் குறித்து விளக்கியுரைக்க.

20. திராவிட மொழிகளில் எச்சங்களும் முற்றுகளும் இடம் பெறுமாற்றை ஆராய்க.

| D–5104 |
|---|

| Sub. Code |
|---|
| 10731 |

DISTANCE EDUCATION

B.Lit. DEGREE EXAMINATION, MAY 2022.

Third Semester

Tamil

சமய இலக்கியம்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. தமிழ் ஆகமம் எனக் கருதப்படும் பக்தி இலக்கியம் யாது?

2. ‘சூடிக்கொடுத்த சுடர்க்கொடி’ எனப் போற்றப்படும் ஆழ்வார் யார்?

3. பாவை நோன்பு – குறிப்பு வரைக.

4. “முன்சேர் தென்னர் சேரர் சோழர்கள் தாம் வணங்கும் திருப்பூவணம்” எனப் பாடியவர்?

5. யாத்திரை பத்து – விளக்கம் தருக.

6. பாண்டிய நாட்டு வைணவத் தலங்கள் இரண்டினைச் சுட்டுக.

7. வள்ளலாரின் இயற்பெயரைக் குறிப்பிடுக.

8. திருவண்ணாமலைத் திருத்தலத்தைப் பாடிய சமயக்குரவர்கள் இருவரைச் சுட்டுக.

9. குணக்குடி மஸ்தான் சாகிபு பற்றி எழுதுக.

10. இரட்சண்ய மனோகரம் நூலின் ஆசிரியர் யார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு <u>ஒரு பக்க</u> அளவில் விடை தருக.

11. (அ) திருமூலர் தன் பிறப்பின் காரணத்தை எங்ஙனம் எடுத்துரைக்கிறார்?

(அல்லது)

(ஆ) ஆண்டாள் திருமாலிடம் பறை வேண்டும் தன்மையை விவரிக்க.

12. (அ) நாவுக்கரசர் இறைவனிடம் தனக்குக் காட்சி தருமாறு வேண்டுவதை விவரிக்க.

(அல்லது)

(ஆ) திருமால் பூசித்த இராமேசுவரத்து இறைவனைத் தேவாரம் போற்றுமாற்றை எழுதுக.

13. (அ) திருஞானசம்பந்தரின் திருப்பூவணப் பதிகச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) திருவார்த்தைப் பதிகக் கருத்துக்களை எடுத்துரைக்க.

14. (அ) பற்றறுத்தலைக் குதம்பைச் சித்தர் எங்ஙனம் விவரிக்கின்றார்?

(அல்லது)

(ஆ) இறைவன் விடமுண்டு உயிர்களைக் காத்தமையைச் சோணசைல மாலை வழி விளக்குக.

15. (அ) பராபரத்தின் இயல்பையும் இயக்கத்தையும் குணங்குடி மஸ்தான் எங்ஙனம் விவரிக்கின்றார்?

(அல்லது)

(ஆ) பாவமன்னிப்புப் பற்றி எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளைக் கூறுமாற்றை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றறுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. திருமூலர் தன்வரலாற்று வழி இறையியல் சிறப்புகளை உரைக்குமாற்றை விவரிக்க.

17. பாவை நோன்பால் உண்டாகும் பயன்களை ஆண்டாள் எங்ஙனம் எடுத்துரைக்கிறார்?

18. திருநாவுக்கரசர் பக்தித் திறத்தை நும்பாடப் பகுதி வழிக் கட்டுரைக்க.

19. இறைவனின் திருவிளையாடல்களைச் சோணசைல மாலை வழி விவரிக்க.

20. தத்துவங்களைச் சொல்வது சித்தரின் வேலை – இக்கூற்றை நிறுவுக.

**D–5105**

| Sub. Code |
|---|
| **10732** |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Third Semester

Tamil

இலக்கணம் அகப்பொருளும் யாப்பும்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours    Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. அகப்பொருள் வகையைக் குறிப்பிடுக.

2. குறிஞ்சித்திணைக்குரிய பெரும்பொழுதுகளைக் குறிப்பிடுக.

3. அறத்தொடு நிற்றல் - சிறுகுறிப்பு வரைக.

4. ஓதற்பிரிவிற்கான கால எல்லை யாது?

5. இல்வாழ்க்கையை எத்தனை வகையாக அகப்பொருள் கூறிகின்றது?

6. யாப்பருங்கலக்காரிகைக்கு முதலில் உரை வரைந்தவர் யார்?

7. பொதுச்சீர் என்பதற்கு விளக்கம் தருக.

8. ‘முதல்தொடை’ எத்தனை வகைப்படும்?

9. கலிப்பாவிற்குரிய ஓசை யாது?

10. வகையுளி என்றால் என்ன?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) அன்பின் ஐந்திணைக்குரிய உரிப்பொருட்களை விளக்கிடுக.

(அல்லது)

(ஆ) இடந்தலைப்பாடு - குறிப்பு வரைக.

12. (அ) களவொழுக்கத்தில் நிகழும் புணர்ச்சி வகையைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) தலைவி அறத்தோடு நிற்றல் குறித்த முறைகளை விவரிக்க.

13. (அ) கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகைகளைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) கற்பு காலப் பிரிவுகளை வகைப்படுத்துக.

14. (அ) யாப்பருக்கலக்காரிகை -நூல் குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) யாப்பிலக்கணம் கூறும் அடியின் வகைகளை விவரிக்க.

15. (அ) அந்தாதித் தொடை, செந்தொடை ஆகியவற்றை சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) வஞ்சிப்பாவின் வகைகளை விளக்கி வரைக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. குறிஞ்சித்திணைக்குரிய கருப் பொருட்களைப் பட்டியலிடுக.

17. அகத்திணையில் வாயில்களின் முக்கியத்துவம் குறித்துக் கட்டுரைக்க.

18. நம்பி உரைக்கும் பரத்தையிற் பிரிவு வகைகள் விளக்கி எழுதுக.

19. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் தருக.

20. யாப்பருங்கலக்காரிகையின் ஒழிபியல் செய்திகளைத் தொகுத்துரைக்க.

———————

| D–5106 |
|---|

| Sub. Code |
|---|
| 10733 |

DISTANCE EDUCATION

B.Lit. DEGREE EXAMINATION, MAY 2022.

Third Semester

Tamil

தமிழிலக்கிய வரலாறு

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. தமிழ்நாடு பற்றி குறிப்பிடும் வடமொழி காப்பியங்களைக் குறிப்பிடுக.

2. 'உன்நாடு எதுவென கேட்டால் தமிழ்நாடு என்று கூறு' என உரை வரைந்தவர்?

3. குட்டித்தொல்காப்பியம் எனச் சிறப்பிக்கப்பெறும் நூல்?

4. 'நெடுந்தொகை' என அறியப்படும் சங்க இலக்கியம் யாது?

5. பழமொழிநானூற்றின் ஆசிரியர் பெயரை எழுதுக.

6. 'வேதம் தமிழ் செய்த மாறன்' யார்?

7. சைவ தல புராணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

8. தூது இலக்கியம் - சிறு குறிப்பு வரைக.

9. பாரதிதாசன் இயற்றி இரு காவியங்களை எழுதுக.

10. கறுப்பு மலர்கள் என்னும் புகழ்ப்பெற்ற நூலைப் படைத்தவர்?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழின் தொன்மை வரலாற்றைச் சுருக்கி வரைக.

(அல்லது)

(ஆ) புறநானூறு வரலாற்றுக் களஞ்சியம் என்னும் கூற்றை விளக்கிடுக.

12. (அ) நாலடியாரின் இலக்கிய வரலாற்றைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) இரட்டைக் காப்பியங்களின் வரலாற்றைச் சுருக்கி வரைக.

13. (அ) ஆழ்வார்களின் தமிழ்ப்பணியைப் பாராட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) திருமந்திரம் பற்றி விளக்கி வரைக.

14. (அ) சிற்றிலக்கியத்தில் முக்கூடற்பள்ளு பெறுமிடத்தைப் பாராட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) சிறுகதை மன்னன் - குறிப்பு வரைக.

15. (அ) தமிழ் மேடை நாடகங்கள் குறித்த செய்திகளைத் தருக.

(அல்லது)

(ஆ) ஹைக்கூ கவிதை வரலாற்றை அப்துல் ரகுமான் வழி நின்று எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. முச்சங்கங்கள் குறித்த வரலாற்றைத் தொகுத்துரைக்க.

17. அற இலக்கியங்களில் திருக்குறள் பெறுமிடத்தைக் கட்டுரைக்க.

18. 'திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்னும் கூற்றை விவரிக்க.

19. சிறுகதை வளர்ச்சியில் இதழ்களின் பங்கை எடுத்துரைக்க.

20. விடுதலைப் போராட்ட வரலாற்றில் பாரதியார் கவிதைகள் - கட்டுரை வரைக.

| D–5107 |
|---|

| Sub. Code |
|---|
| 10734 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Third Semester

தமிழ்

காப்பிய இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. தமிழ் மொழியில் முதன்முதலாகக் தோன்றிய பெருங்காப்பியம் எது?

2. இரட்டைக் காப்பியத்தில் பௌத்த சமயத்தைச் சார்ந்த காப்பியம் எது?

3. மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல்களில் சிலவற்றைக் கூறு?

4. மாடல மறையோன் யார்?

5. காடுகாண் காதை கூறும் செய்தியாது?

6. சீவக சிந்தாமணியின் வேறு பெயர் என்ன?

7. சீவகன் தன் தாயைக் காணச் செல்கையில் அவனுடன் சென்றவர்கள் யார்? யார்?

8. கம்பர் இராமாயணத்திற்கு இட்ட பெயர் என்ன?

9. சோழமன்னன் அநபாயனிடம் முதலமைச்சராகப் பணிபுரிந்தவர் யார்?

10. தேம்பாவணி எத்தனைக் காண்டங்களைக் கொண்டது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கோவலன் காவிரியை எவ்வாறு புகழ்ந்துரைத்தார்?

(அல்லது)

(ஆ) கண்ணகி வழுக்கு உரைத்த பாங்கினை விவரி.

12. (அ) சீவகன் கேமசரியை விட்டுப் பிரிதல் நிகழ்வைக் கூறுக.

(அல்லது)

(ஆ) சீவக சிந்தாமணியின் நூல் அமைப்பினைக் கூறுக?

13. (அ) கம்பரின் கவிப்புலமையைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) அயோத்திக் காண்டம் அமைப்பை விளக்குக.

14. (அ) சேக்கிழார் சிறப்புகளைத் தொகுத்துக் கூறுக.

(அல்லது)

(ஆ) "சின்ன சீறா" பற்றி சீறாப்புராணம் வழி நின்று விளக்கி வரைக.

15. (அ) வீரமாமுனிவரின் தமிழ்ப்பற்றினைக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) நபிகள் நாயகத்தின் உயிர்க் கருணையை விளக்கி கூறுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. சிலப்பதிகாரத்தின் சிறப்பியல்புகளை விளக்கி வரைக.

17. சிலப்பதிகாரம் மதுரைக் காண்டத்தின் நிகழ்ச்சிகளை நும் பாடப்பகுதிக் கொண்டு கட்டுரைக்க.

18. சீவக சிந்தாமணி கூறும் அறக்கருத்துகளைக் தொகுத்தெழுதுக.

19. பெரிய புராணத்தின் அமைப்பையும் பூசலார் நாயன்நாரின் வரலாற்றினையும் தொகுத்தெழுதுக.

20. நபிகள் நாயகம் மானின் மீது காட்டிய அன்பினை விளக்கி வரைக.

---

| D–5108 |
|---|

| Sub. Code |
|---|
| 10741 |

DISTANCE EDUCATION

B.Litt. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

நான்காம் பருவம்

கவிதை இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ‘விதுரன்’ பாண்டவர்க்குக் குறிப்பால் உணர்த்தியது யாது?

2. அமுதவல்லியின் காதலன் யார்?

3. சுந்தரம் பிள்ளை எதன் சீரிளமைத் திறம் வியந்து வாழ்த்துகின்றார்?

4. சிக்கனம் என்ற கவிதை நூலின் ஆசிரியர் யார்?

5. வெயிலுக்கேற்று நிழலுண்டு எனப் பாடியவர் யார்?

6. அப்துல் ரகுமான் ‘மெசியா’ எனக் குறிப்பது யாரை?

7. பூமி மூன்று பங்கு கடல் ஒருபங்கு பாலைவனம் எனப் பாடியவர்?

8. ‘தூள்பட விடுதலை வந்தது’ எனப்பாடியவர் யார்?

9. ஹைகூக்கவிதை எக்கவிதைகளிலிருந்து விடுபட்டுத் தோன்றியது?

10. கழனியூரானின் இயற்பெயர் யாது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பீமனின் கோப மொழிகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பாரதிதாசன் காண முற்படும் புதிய உலகு பற்றி விளக்குக.

12. (அ) சிக்கனம் குறித்த சுரதாவின் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) உள்ளத்து உண்மை குறித்துத் தேசிய விநாயகம் பிள்ளை கூறுவன யாவை?

13. (அ) கண்ணதாசன் மும்மன்னர்கள் குறித்து எழுதுவன யாவை?

(அல்லது)

(ஆ) சிற்பியின் உருவத்திறனை நும் பாடப்பகுதி வழிப் புலப்படுத்துக.

14. (அ) என் செவியின் சுவாசம் உணர்த்தும் கருத்துக்களைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பிச்சமூர்த்தியின் புதுக்கவிதை முயற்சிகளை விளக்கியுரைக்க.

15. (அ) வாழ்க்கை குறித்த கல்யாண்ஜியின் எண்ணங்களைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) சென்ரியூ கவிதைகள் குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. தேர்ப்பாகனுக்கும் பாஞ்சாலிக்கும் நடந்த உரையாடல் திறத்தினை விவரிக்க.

17. புரட்சிக் கவியின் கவித்திறத்தை ஆராய்க.

18. கவிமணியின் மொழிபெயர்ப்புச் சிறப்புகளைக் கவிதை வழி வெளிப்படுத்துக.

19. பால்வீதி கவிதையில் இடம்பெறும் கவிதை வடிவங்களை ஆராய்க.

20. வைரமுத்துவின் கவித்திறத்தை விளக்கிக் கட்டுரை தருக.

———————

| D–5109 |
|---|

| Sub. Code |
|---|
| 10742 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Fourth Semester

இலக்கணம் புறப்பொருளும் அணியிலக்கணமும்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                                   Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. வெண்பாமாலையின் கடவுள் வாழ்த்துப் பேசும் தெய்வங்களைச் சுட்டுக.

2. விரிச்சி - சிறுகுறிப்பு வரைக.

3. பாசறையின் வகைகளைக் குறிப்பிடுக.

4. ‘கந்தழி’ எந்நில அரசனைப் புகழ்ந்துரைக்கின்றது?

5. வாயுறை வாழ்த்து - விளக்கம் தருக.

6. புறப்பொருள் கூறும் ‘கல் நடுதல்’ என்றால் என்ன?

7. தண்டியலங்காரம் பேசம் முதல் அணி யாது?

8. பின்வருநிலை அணியின் வகைகளைக் கூறுக.

9. ஒட்டணியின் இலக்கணம் தருக.

10. 'தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே

நாவினால் சுட்டவடு" — இத்திருக்குறளில் அமைந்துள்ள அணி யாது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) வெட்சித்திணையின் பாதீடு, உண்டாட்டு ஆகிய துறைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) சினம் ஆறாத வஞ்சி வேந்தனின் செயல்களை வஞ்சித் திணை வழி விளக்குக.

12. (அ) மதில் போர் எத்திணைக்குரியது? அதன் துறைகளைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) கடவுள் வாழ்த்துப் பற்றிப் பாடாண்திணையின் துறைகளைச் சுட்டுக.

13. (அ) போர்க் களக் குரவைகளின் வகைகளை விரித்துரைக்க

(அல்லது)

(ஆ) பெருந்திணைப் பற்றி தண்டி ஆசிரியர் உரைப்பனவற்றை எழுதுக.

14. (அ) உவமை அணியின் வகைகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தீவக அணி பன்னிரண்டாதல் எவ்வாறு? விவரிக்க.

15. (அ) சுவை அணியின் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) வஞ்சப் புகழ்ச்சி அணியின் இலக்கணத்தைச் சான்றுக் காட்டியுரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. வெட்சியைத் திணையைப் போர் என்று கருதலாமா? விவாதிக்க.

17. உறழ்ச்சியால் வரும் வெற்றிகள் குறித்து வாகைத்திணைப் பேசுமாற்றை எழுதுக.

18. தண்டியின் பொதுவியல் செய்திகளைத் தொகுத்துரைக்க.

19. சிலேடை அணியின் வகைகளைச் சான்றுகளுடன் எடுத்துரைக்க.

20. இலக்கியத்தில் தற்குறிப்பேற்ற அணி பெறுமிடத்தைப் புலப்படுத்துக.

| D–5110 |
|---|

| Sub. Code |
|---|
| 10743 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Fourth Semester

நாட்டுப்புறவியல்

(CBCS – 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. 'Fokelore' என்ற சொல்லை 'நாட்டுப்புறவியல்' என மொழிபெயர்த்தவர்?

2. நாட்டுப்புறவியலுக்கென்று தனித்துறை ஆரம்பிக்கப்பட்டக் கல்லூரி?

3. தாலாட்டுப் பாடலின் ராகம் யாது?

4. 'பஞ்சதந்திரக்கதைகள்' என்ற கதைத் தொகுதியின் ஆசிரியர்?

5. பொய்க்கால் குதிரை – சிறு குறிப்பு வரைக.

6. 'பூ பூக்கும், காய் காய்க்கும். ஆனால், பழம் பழுக்காது' – விடுகதைக்கான விடை தருக.

7. பழமொழியை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய தமிழ் அற இலக்கியம்?

8. அழகர் ஆற்றில் இறங்கும் திருவிழா நடைபெறும் ஊர்?

9. புகழ்ப் பெற்ற மாட்டுச் சந்தைகள் இரண்டின் பெயரைத் தருக.

10. கபடி விளையாட்டின் வேறு பெயர்களை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நாட்டுப்புறவியலை வகைப்படுத்தி விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஒப்பாரி பாடல்களின் அமைப்பும் இயல்பும் குறித்து விளக்குக.

12. (அ) நல்லதங்காள் கதையினைச் சுருக்கி வரைக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறக் கும்மியின் முக்கியத்துவத்தை உணர்த்துக.

13. (அ) மக்களின் வீட்டுத்தெய்வ வழிபாட்டைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) வளைக்காப்புச் சடங்கு குறித்த மக்கள் நம்பிக்கையை விவரிக்க.

14. (அ) நாட்டுப்புறக் கலைகளில் கரகாட்டம் பெறுமிடத்தைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) பழமொழிகளும் விடுகதைகளும் – தொடர்புப்படுத்துக.

15. (அ) நும் பகுதியில் வழங்கும் மஞ்சள் காமாலைக்கான மருத்துவத்தை விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறப் பாடல்களில் காணலாகும் யாப்பழகை விவரிக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழக நாட்டுப்புறவியல் வரலாற்றை நும் பாடப் பகுதியால் சுருக்கி வரைக.

17. நாட்டுப்புறக் கலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் புலப்படுத்துக.

18. சமூகவியல் நோக்கில் முத்துப்பட்டன் வரலாற்றை விவரிக்க.

19. நாட்டுப்புற விளையாட்டுகளின் இயல்புகளை எடுத்துரைக்க.

20. மாட்டுப்பொங்கல் விழாக் குறித்த செய்திகளைத் தொகுத்துரைக்க.

---

| D–5111 |
|---|

| Sub. Code |
|---|
| 10744 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Fourth Semester

இதழியல்

(CBCS 2018-19 Academic Year onwards)

Time : Three hours    Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. 'ஜெர்னலிசம்' (Journalism) என்ற சொல்லின் மூலமொழி யாது?

2. இந்திய இதழ்களின் முன்னோடி - எடுத்துக்காட்டுத் தருக.

3. உலகின் முதல் அச்சிதழ் எது?

4. தமிழ் மாகசீன் – சிறு குறிப்பு வரைக.

5. கால அடிப்படையில் நாளிதழ்களை வகைப்படுத்துக.

6. தலையங்கம் – பொருள் கூறுக.

7. இதழியல் விதிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

8. காந்தியடிகள் இந்தியாவில் தொடங்கிய இதழ்களைச் சுட்டுக.

9. 'நவசக்தி' என்ற இதழின் ஆசிரியராக இருந்த தமிழறிஞர்?

10. சங்க காலத்தில் விளம்பரத்திற்காக எதனைப் பயன்படுத்தினர்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) இதழியலின் இலக்கணத்தை வரையறையுடன் விவரிக்க.

(அல்லது)

(ஆ) தகவல் தொடர்பு சாதனங்களில் வானொலி பெறுமிடத்தைச் சுட்டுக.

12. (அ) கல்வி வளர்ச்சியில் சிறுவர் இதழ்களின் பங்கினைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) செய்திதாள் அலுவலக அமைப்பையும் பணிகளையும் விளக்குக.

13. (அ) எவை செய்திகளாகின்றன? சான்றுகளுடன் விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சுதந்திரப் போராட்டத்தில் இதழ்களின் பங்கினை எடுத்துரைக்க.

14. (அ) செய்தியாளர்களிடம் இருக்க வேண்டிய கருவிகள் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) செய்தி நிறுவனங்களின் பணிகளைச் சுட்டியுரைக்க.

15. (அ) இந்தியாவின் பதிப்புரிமைச் சட்டம் குறித்த கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) இதழியலில் படக்காட்சிகளின் முக்கியத்துவத்தைச் சான்றுடன் விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. இதழ்கள் பின்பற்ற வேண்டிய பொது அறங்களை விரித்துரைக்க.

17. செய்தியின் வகைகளைச் சான்றுகள் தந்து விளக்குக.

18. பாரதியாரின் இதழியல் பணிகளைப் பாராட்டியுரைக்க.

19. இந்தியாவில் இதழியல் சுதந்திரம் குறித்துக் கட்டுரைக்க.

20. இதழியல் வளர்ச்சியில் இணையத்தின் பங்கினை எடுத்துரைக்க.

———————

| D–5112 |
|---|

| Sub. Code |
|---|
| 10751 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Fifth Semester

Tamil

பண்டைய இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic year onwards)

Time : Three hours　　　　Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. தலைவி எத்திசையில் இருப்பதாக அகநானூற்றுத் தலைவன் குறிப்பிடுகிறான்?

2. மாறுபட்டுப் பார்க்குமிடத்தும் விரும்பி பார்க்குமிடத்தும் என்ன நிகழும் என்று ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுவதைக் கூறுக.

3. எதிர் சென்று போர் செய்ய மாட்டான் அரசன், ஏன்?

4. தலைவியைப் பிரிந்து தலைவன் சென்ற பாலை நிலப்பாதை எவ்வாறு இருந்ததாகக் கந்தரத்தனார் கூறுகிறார்?

5. இனி எப்போது வருமோ? என்று தலைவன் கூறும் செய்தி யாது?

6. நக்கீரர் எழுதிய நூல்களின் பெயரினைக் குறிப்பிடுக.

7. பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்தினைப் பாடியவர் யார்?

8. முதல் ஊழிக்காலம் எவ்வாறு இருந்ததாகக் கீரந்தையார் குறிப்பிடுகின்றார்?

9. மயிர் நீங்கினால் உயிர்விடும் விலங்கினம் என்று வள்ளுவர் தரும் கருத்து யாது?

10. பெருந்தன்மையாளர் பண்பு எத்தகையது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) அகநானூறு குறிப்பு தருக.

(அல்லது)

(ஆ) புறநானூறு சிறப்புகளைத் தொகுத்துரைக்க.

12. (அ) பகைவரைப் பாதுகாக்கும் வலிமையுள்ள வேந்தனின் செயல் எத்தகையது?

(அல்லது)

(ஆ) அரணாக நிற்கும் அரசனின் செயல் குறித்து எழுதுக.

13. (அ) ஊழிக்காலம் குறித்துக் கீரந்தையார் கூறும் கருத்தினைத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) நெடிய கரிய பனைமடல் குதிரை மேல் இருப்பவனின் செயல் குறித்து குறிப்பு ஆராய்க.

14. (அ) குடிமை என்னும் தலைப்பில் வள்ளுவர் தரும் செய்திகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) சான்றாண்மையின் தன்மை குறித்து விளக்கியுரைக்க.

15. (அ) உழவு குறித்து வள்ளுவரின் கருத்தினை விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) குடிசெயல் வகை வள்ளுவர் வழிநின்று தெளிவுபடுத்துக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் <u>கட்டுரை</u> வடிவில் விடை தருக.

16. ஆலூர் மூலங்கிழார் பாடல்களின் சிறப்பினை விவாதிக்க.

17. பரிபாடலில் காணலாகும் செவ்வேளின் தன்மைகளை விரிவாக எடுத்துரைக்க.

18. சேரனின் வீரம் குறித்துக் குமட்டூர்க் கண்ணனார் வழிநின்று விவாதிக்க.

19. நெய்தற்கலியில் காணலாகும் செய்திகளைக் கட்டுரைக்க.

20. நன்றியில் செல்வம் குறித்து வள்ளுவர் தரும் செய்திகளை விரிவாக ஆராய்ந்துரைக்க.

———————

| D–5113 |
|---|

| Sub. Code |
|---|
| 10752 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Fifth Semester

இலக்கணம் : தொல்காப்பியம் - எழுத்து (இளம்பூரணம்)

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்க

1. தொல்காப்பியர் குறிப்பிடும் சார்ப்பெழுத்துகள் யாவை?

2. நெட்டெழுத் தேழே ——— ——— நிரப்புக.

3. புணர்ச்சியில் மூவகையான திரிபுகள் யாவை?

4. குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டல் - சான்று தருக.

5. மகர ஈறு எச்சாரியை பெறும்?

6. உகரச் சுட்டின் முன்னர் மென்கணம் எவ்வாறு புணரும்?

7. 'சே' என்னும் விலங்கின் பெயர் புணர்ச்சியில் எச்சாரியை பெறும்?

8. வல் + கடிது - எவ்வாறு புணரும்?

9. பத்தின் முன் ஆயிரம் எவ்வாறு புணரும்?

10. தொல்காப்பிய எழுத்து, சொல், பொருள் என மூன்றிற்கும் முதன்முதலில் உரை எழுதியவர் யார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) எழுத்தின் வடிவம் குறித்துத் தொல்காப்பியர் கூறுவனவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) எழுத்துக்களின் இயக்கம் குறித்து மொழிமரபு கூறும் செய்திகளை எழுதுக.

12. (அ) மொழிபுணர் இயல்பைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) அளபு, நிறை, எண்ணுப் பெயர்கள் தம்மிற் புணருமாற்றை விளக்குக.

13. (அ) வகர ஈறு புணர்ச்சியில் பெறும் சாரியையைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) அகரச் சுட்டுப் புணரும் நிலையைச் சான்றுடன் விளக்குக.

14. (அ) ஔகார ஈற்றுப் புணர்ச்சிக் குறித்துத் தொல்காப்பியர் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) மகர ஈற்றுத் தொழிற்பெயர் புணர்ச்சியைச் சான்றுடன் விளக்குக.

15. (அ) வன்தொடர் மென்தொடர் குற்றியலுகரம் புணருமாற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒன்பது + பத்து - எவ்வாறு புணரும்? விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. மொழியிறுதி எழுத்துக்களாகத் தொல்காப்பியர் கூறுவனவற்றை இளம்பூரணம் உரைவழி விவரிக்க.

17. தொல்காப்பிய பிறப்பியல் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

18. உகர ஈற்றுப் புணர்ச்சியை இளம்பூரண உரைவழி விவரிக்க.

19. மெல்லொற்று ஈறுகள் புணர்ச்சியைச் சான்றுடன் விவரிக்க.

20. குற்றுகர எண்ணுப்பெயர் புணர்ச்சி பற்றிக் கட்டுரைக்க.

———————

| D–5114 |
|---|

| Sub. Code |
|---|
| 10753 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Fifth Semester

ஊடகவியல்

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ஊடகவியல் - பொருள் விளக்கம் தருக.
2. ஊடகவியலின் மூன்று நிலைகளைக் கூறுக.
3. இரண்டு மகளிர் இதழ்களைக் குறிப்பிடுக.
4. திராவிட நாடு இதழ் யாரால் தொடங்கப்பெற்றது?
5. இதழ்களில் தலையங்கப் பகுதியை யார் எழுதுவார்?
6. ஒலி ஊடகத்திற்குச் சான்றுகள் தருக.
7. இணையம் - குறிப்புத் தருக.
8. உலக செய்தி நிறுவனங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
9. 'twitter'-தமிழில் மொழிபெயர்க்க.
10. தமிழ்நாடு அரசின் பெண்கள் பாதுகாப்புச் செயலி (App) யாது?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) ஊடகவியல் மூன்று செயல்முறைகளை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) இதழியல் என்பதற்கான வரையறைகளைச் சான்றுகள் தந்து விளக்குக.

12. (அ) ஊடகவியலின் வகைகளைச் சான்று காட்டி விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழில் தோன்றிய அரசியல் இதழ்கள் குறித்த செய்திகளைத் தருக.

13. (அ) செய்தியின் உள்ளடக்கம் எங்ஙனம் அமைப்பெறும்? விளக்குக.

(அல்லது)

(ஆ) செய்தி நிறுவனங்களின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.

14. (அ) தள அடிப்படையில் விளம்பரத்தை வகைப்படுத்திக் காட்டுக.

(அல்லது)

(ஆ) மரபு சார்ந்த ஊடகங்களை வகைப்படுத்துக.

15. (அ) வானொலி மக்களுக்குப் பயன்படுமாற்றை நிறவுக.

(அல்லது)

(ஆ) செய்தி செயலில் (NEWS APP) குறித்துச் சான்றுகளுடன் விவரிக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஊடகவியலால் சமூகத்திற்கு ஏற்படும் நன்மைகளைத் தொகுத்துரைக்க.

17. செய்தியாளர்களுக்கான தகுதிகளையும் பண்புகளை வரையறுக்க.

18. விளம்பரத்தின் பணிகளைச் சான்றுகளுடன் எடுத்துரைக்க.

19. OTT- தளத்திற்கான தேவையைப் பற்றி விவரிக்க.

20. இணைய நூல்ப் பயன்பாடு குறித்துக் கட்டுரைக்க.

———————

**D–5115**

**Sub. Code**
**10754**

DISTANCE EDUCATION

B.Lit. (TAMIL) DEGREE EXAMINATION, MAY 2022.

Fifth Semester

இலக்கணம் : தொல்காப்பியம் — சொல் (சேனாவரையம்)

(CBCS 2018 – 2019 Academic year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்க.

1. —————— ஒற்றே ஆடூஉ அறிசொல்-நிரப்புக.

2. தன்மை முன்னிலைக்குரிய சொற்கள் எவை?

3. எழுவாய் ஏற்கும் பயனிலைகளுள் இரண்டனை எழுதுக.

4. கன்றல் என்னும் சொல் எவ்வெவ் வேற்றுமைக்கு வரும்.

5. விளியேற்கும் உயிரீறுகள் எவை?

6. அஃறிணை வினையின் வகைகளைக் கூறுக.

7. காலம் எத்தனை வகைப்படும்?

8. இடைச்சொல்லின் இயல்பு யாது?

9. மிகுதி செய்யும் பொருளில் வரும் உரிச்சொற்களுள் இரண்டினை எழுதுக.

10. பொருள்கோள் எத்தனை வகைப்படும்.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க.

11. (அ) பால் குறித்துத் தொல்காப்பியர் கூறுவனவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) வினா, விடை அமையும் வகை குறித்து எடுத்துக்காட்டுடன் விளக்குக.

12. (அ) நான்காம் வேற்றுமை அமையும் முறை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) ஏழாம் வேற்றுமை குறித்துத் தொல்காப்பியர் கூறும் கருத்துகள் யாவை?

13. (அ) முதற்பெயர், சினைப்பெயர்களில் ஏற்படும் வேற்றுமை மயக்கம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) விளியேற்கும் புள்ளி ஈறுகள் குறித்துச் சான்றுடன் விளக்குக.

14. (அ) பெயர்ச் சொல்லின் இலக்கணமாகத் தொல்காப்பியர் கூறுவதை விளக்குக.

(அல்லது)

(ஆ) தன்மை பன்மை வினைமுற்றுச் சொற்கள் அமையும் முறை குறித்து எழுதுக.

15. (அ) எண்ணிடைச் சொற்கள் குறித்துத் தொல்காப்பியம் கூறுவனவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) கடி என்னும் சொல் குறித்துத் தொல்காப்பியர் கூறுவன யாவை?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. கிளவியாக்கத்தில் இடம் குறித்துத் தொல்காப்பியர் கூறும் கருத்துக்களைச் சேனாவரையர் வழி நின்று விவரிக்க.

17. இரண்டாம் வேற்றுமை தொகை, விரி குறித்துத் தொல்காப்பியம் கூறுவனவற்றைக் நன்னூலோடு ஒப்பிட்டு ஆராய்க.

18. விரவுப் பெயர்கள் குறித்துத் தொல்காப்பியர் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

19. உரிச்சொல் என்றால் என்ன? அதன் பயன்பாடுகளைச் சேனாவரையர் உரைவழி விவரிக்க.

20. தொகைச்சொற்கள் குறித்துத் தொல்காப்பியம் வழி நின்று விவரிக்க.

———————

| D–5116 |
|---|

| Sub. Code |
|---|
| 10761 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

ஆறாம் பருவம்

ஒப்பிலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. பால்வான் தீகம் ஒப்பிலக்கியம் என்பதற்கு அளித்த விளக்கம் யாது?

2. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலின் ஆசிரியர்?

3. தமிழில் ஒப்பிலக்கியம் என்ற சொல்லை முதலில் பயன்படுத்தியவர் யார்?

4. ஒப்பிலக்கிய ஆய்வுத்துறையில் உள்ள இருபெரும் பிரிவுகள் யாவை?

5. துவிபாஷி என்போர் யார்?

6. இலக்கியத்தோடு பெருமளவில் ஒத்துப் போகும் கலைகள் யாவை?

7. பயன் முதற்கொள்கை என்பது வற்புறுத்தப்பட்ட கிரேக்க நாடகம் யாது?

8. புதுச் செந்நெறிக்காலம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

9. வீறுணர்ச்சி கவிதை இயக்கம் விளக்கம் தருக.

10. உலக இலக்கியம் என்ற தொடர் முதன்முதலில் அறிமுகம் செய்தவர் யார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) ஒப்பிலக்கியம் வரையறை செய்க.

(அல்லது)

(ஆ) கூர்தலறக் கோட்பாடு என்றால் என்ன? விளக்கம் தருக.

12. (அ) ஒப்பிலக்கியம் குறித்த அமெரிக்க கோட்பாடுகளைச் சுருக்கித் தருக.

(அல்லது)

(ஆ) ஒப்பிலக்கிய மரபில் தாக்கக் கோட்பாட்டின் இன்றியமையாமையை எடுத்துரைக்க.

13. (அ) இலக்கியத்திற்கும் இசைக்கும் உள்ள தொடர்பை ஒப்பிலக்கியப் பார்வையில் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) இறைநெறிக் கோட்பாடுகள் குறித்து விவரிக்க.

14. (அ) வீறுணர்ச்சிப் பாடல்களின் தன்மைகளைச் சான்றுகளுடன் நிறுவுக.

(அல்லது)

(ஆ) புதுச்செந்நெறி – விளக்கம் தருக.

15. (அ) ஒப்பிலக்கியத்தின் ஆய்வுப் பரப்புகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தேசிய இலக்கியம் குறித்து விளக்கியுரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஒப்பிலக்கியம் குறித்த அறிஞர்களின் கருத்தைத் தொகுத்துரைக்க.

17. மாற்று வடிவங்களும் மீட்டுருவாக்கங்களும் என்ற தலைப்பில் கட்டுரை தருக.

18. இலக்கியமும் பிற துறைகளும் குறித்து விவரித்தெழுதுக.

19. இலக்கியப் போக்குக் குறித்த ஒப்பிலக்கியச் சிந்தனைகளை ஆராய்க.

20. இலக்கியத்தின் நால்வகைப் பார்வைகள் குறித்து விளக்கியுரைக்க.

| D–5117 |
|---|

| Sub. Code |
|---|
| 10762 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Sixth Semester

இலக்கணம் தொல்காப்பியம் – பொருள் – இளம்பூரணம்

(CBCS 2018 – 2019 Calendar Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. முதற்பொருள் எனக் குறிக்கப் பெறுவன யாவை?

2. உயர்ந்தோர்மேன – எனத் தொல்காப்பியரால் குறிக்கப்பெறும் பிரிவுகள் யாவை?

3. முற்படக் கிளந்த எழுதிணை – என்பதனால் பெறப்படுவது யாது?

4. பாதீடு என்றால் என்ன?

5. பெண்பாற்குரிய – எனத் தொல்காப்பியம் குறிக்கும் பண்புகள் யாவை?

6. கொடுப்போர் இன்றியும் கரணம் அமையும் இடம் எது?

7. பிற்காலத் தூது இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்ட தொல்காப்பிய நூற்பாவினைத் தருக.

8. நகை தோன்றும் நிலைக்களன்கள் யாவை?

9. மாரி அன்ன வண்கை – எவ்வகை உவமை?

10. மெல்லிசை வண்ணம் – குறித்துரைக்க.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வருவனவற்றிற்கு ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) நற்றாய் கூற்று நிகழும் இடங்களை அகத்திணையியல் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) கைக்கிளை என்பதன் இலக்கணத்தை விளக்கியெழுதுக.

12. (அ) அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கம் என்பதனைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) வாயுறை வாழ்த்து என்பதனைச் சான்று காட்டி விளக்குக.

13. (அ) சிறப்புடை மரபின் களவெனப்படுவன யாவை?

(அல்லது)

(ஆ) மதியுடம்படுத்தல் குறித்து எழுதுக.

14. (அ) உள்ளுறை உவமம் குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) 'ஒன்றிடத்து இருவற்கும் உரிய பாற்கிளவி'– விளக்கியுரைக்க.

15. (அ) அசையின் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) ஏந்தல் வண்ணம் என்பது குறித்தெழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பிரிவில் நிகழும் கூற்றுகளைத் தொகுத்துரைக்க.

17. வஞ்சித்திணையின் துறைகளைக் கட்டுரைக்க.

18. களவின்கண் தலைவி கூற்று நிகழும் இடங்களை விரித்தெழுதுக.

19. தோழி அறத்தொடு நிற்றலை விளக்கி வரைக.

20. எண்வகை வனப்புகள் குறித்து எழுதுக.

| D–5118 |
|---|

| Sub. Code |
|---|
| 10763 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Sixth Semester

நாடகத்தமிழ்

(CBCS – 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. நாடகத்தின் தனிச் சிறப்பு எது?

2. சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள நாடகம் தொடர்பான சொற்கள் நான்கினைக் கூறுக.

3. நாடகம் என்றால் என்ன?

4. நாடகத்திற்கு முன்னோடிகளாக இருந்தவை எவை?

5. பாமர மக்களின் பல்கலைக்கழகமாக விளங்குவது எது?

6. நாடகக்கலை வீழ்ச்சியுற்ற காலம் எது?

7. யாருடைய காலத்தில் நாடகக்கலை புத்துணர்ச்சி பெற்றது என்பதைக் கூறுக.

8. கமலாயபட்டர் எழுதிய நாடகம் எது?

9. நாடகத் திரைச்சீலை காட்டுவதில் புதிய உத்தியைப் பயன்படுத்திய நாடகக் குழுவினர் யார்?

10. பெங்களூர் அப்பாவுபிள்ளை எழுதிய நாடகத்தின் பெயரினைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) நாடகத்துக்கும் கூத்துக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை விளக்குக.

(அல்லது)

(ஆ) பல்லவர்கால நாடகங்களின் சிறப்பினை எடுத்துரைக்க.

12. (அ) இசுலாமியர் கால நாடகங்கள் குறித்துத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) கிறித்துவர் கால நாடகங்கள் தரும் செய்திகளை வகைப்படுத்தியுரைக்க.

13. (அ) ஓரங்க நாடகங்கள் என்றால் என்ன? தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) அங்கத நாடகங்கள் குறித்து விளக்குக.

14. (அ) தனிமனித வரலாற்று நாடகங்கள் தரும் செய்திகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) குழந்தை நாடகங்கள் குறித்து விளக்கியுரைக்க.

15. (அ) வீதி நாடகங்கள் குறித்து விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) கூத்துப்பட்டறை குறித்து விளக்கி வரைக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பெண் நாடகக் கலைஞர்களின் சிறப்பினை விவாதிக்க.

17. நவீன நாடகம் இன்றைய சூழலுக்குப் பொருந்துமாற்றை விரிவாக எடுத்துரைக்க.

18. நுமது பாடப்பகுதியில் அமைந்துள்ள ஆண் நாடகக் கலைஞர்கள் திறம்பாட்டை விவாதிக்க.

19. "தமிழ் நாடகங்களும் – இந்திய விடுதலையும்" என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

20. நாடக இமையம் சங்கரதாஸ் சுவாமிகள் குறித்து விரிவாக எடுத்துரைக்க.

———————

**D–5119**

**Sub. Code**
**10764**

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2022.

Sixth Semester

விளம்பரக் கலை

(CBCS 2018-19 Academic Year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. அறிவிப்பு அல்லது விளம்பரம் – வேறுபாடு யாது?

2. நினைவூட்டல் விளம்பரத்தின் இயல்புகள் யாவை?

3. தூண்டில் விளம்பரம் குறித்து எழுதுக.

4. அரசு விளம்பரங்களின் நோக்கம் யாது?

5. தடை செய்யப்பட்ட விளம்பரம் என்பது யாது?

6. மறைமுக விளம்பரத்துக்குச் சான்று பகர்க.

7. விளம்பர விருதுக்கான தகுதிகள் யாவை?

8. விளம்பரத்தின் தாக்கத்தை இயம்புக.

9. விளம்பர அறங்கள் மூன்றினைக் கூறுக.

10. விளம்பரங்களின் தவறான போதனைகளைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) வானொலி விளம்பரங்களின் தனிச்சிறப்புகள் யாவை?

(அல்லது)

(ஆ) தொலைக்காட்சி விளம்பரத்தின் குறைகளை விளக்குக.

12. (அ) விளம்பரங்களில் உள்ள மனோதத்துவக் கூறுகளை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) விளம்பர நகல் குறித்து விளக்குக.

13. (அ) செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுக.

(அல்லது)

(ஆ) திரைப்பட விளம்பரங்களின் இயல்புகளைக் கூறுக.

14. (அ) விளம்பரத்துறை இதழ்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) விளம்பரங்களின் வகைப்பாடுகளை எடுத்துரைக்க.

15. (அ) நிதி தொடர்பான விளம்பரங்களின் தன்மைகள் பற்றி விவரி.

(அல்லது)

(ஆ) குழந்தைகளை மையப்படுத்திய விளம்பரங்களை ஆராய்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. விளம்பர வரலாறு பற்றி விரிவாக எழுதுக.

17. விளம்பரங்களால் நுகர்வோர் அடையும் நன்மைகளை எடுத்தியம்புக.

18. விளம்பர ஒழுக்க நெறிகள் யாவை?

19. விளம்பர உத்திகளை விளக்குக.

20. விளம்பரம் தொடர்பான சட்டங்களைப் பற்றிக் கட்டுரை வரைக.